# 20-07-2024 செய்தி

## கால்நடைகளுக்கு 'கார்பன்' வரியா?

**இந்தியா முன்னனி**

- சர்வதேச சூரிய எரிசக்தி கூட்டமைப்பு, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கைமுறை, மரபுசாரா எரிசக்தி உற்பத்தியை அதிகரித்தல், காடுகளின் பரப்பை அதிகரித்தல், ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிகளுக்குத் தடை, பெட்ரோலில் எத்தனால் கலத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து, சுற்றுச்சூழலைக் காப்பதில் முன்னணி நாடாக இந்தியா திகழ்கிறது.
- சுற்றுச்சூழலைக் காப்பதற்கு வளர்ச்சியடைந்த மேற்கத்திய நாடுகள் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என அந்நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்களே போர்க்கொடி தூக்கியுள்ளனர்.
- புவி வெப்பமயமாதலைத் தடுத்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்டவற்றின் பக்கம் அரசுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் பலகை போராட்ட உத்திகளை அவர்கள் கையிலெடுத்துள்ளனர்.
- இத்தகைய சூழலில் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்ற பெயரில் மேற்கத்திய நாடுகள் அறிவிக்கும் திட்டங்கள், ஆர்வலர்களின் போராட்டங்களை மட்டுப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதோ என எண்ண வைக்கிறது.
- அந்த வகையில், ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் அறிவித்த 'எல்லை தாண்டிய கார்பன் வரி என்ற திட்டம், இந்தியா, சீனா, பிரேசில் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளது.
- அத்திட்டத்தின்படி, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இறக்குமதியாகும் பொருள்களின் உற்பத்தியின் போது வெளியேற்றப்படும் கரியமில வாயு அளவுக்கு ஏற்றவாறு வரி விதிக்கப்படும்.
- அதன்படி, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எஃகு, அலுமினியம், சிமெண்ட், உரங்கள் உள்ளிட்ட பொருள்களுக்கு 2026 –ஆம் ஆண்டு முதல் கார்பன் வரியை ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவுள்ளது.
- அதனால் ஐரோப்பிய நாடுகளுக்கு அலுமினியம், இரும்பு, எஃகு பொருள்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் இந்தியா பெரும் பாதிப்பைச் சந்திக்கும்.
- வரலாற்று ரீதியில், சுற்றுச்சூழல் சீர்குலைவுக்கு மேற்கத்திய நாடுகளே முக்கியக் காரணம். எனவே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு அந்நாடுகளே முன்னின்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால், அந்நாடுகளோ பொறுப்புகளை எளிதாக வளர்ந்து வரும் நாடுகளின் தலையில் சுமத்தும் வேலையில் ஈடுபட்டு வருகின்றன.
- இது ஒருபுறமிருக்க, ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் டென்மார்க், உலகிலேயே முதல் முறையாக கால்நடைகளுக்கு கார்பன் வரி விதிக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.
- புவி வெப்பமயமாதலில் கரியமில வாயுவை விட மீத்தேனுக்கு அதிமுக்கியப் பங்குண்டு. மாடுகள், பன்றிகள் உள்ளிட்ட கால்நடைகள் வளர்ப்பில் மீத்தேன் அதிகமாக வெளியேற்றப்படுகிறது. கால்நடை வளர்ப்பின் மூலமாக 32% மீத்தேன் வளிமண்டலத்தில் கலப்பதாக ஐ.நா. அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.
- பால் பொருட்கள், இறைச்சி ஏற்றுமதியில் டென்மார்க் முன்னணி வகிக்கிறது, அங்கு கால்நடைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளதால், மீத்தேன் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், 2030 –ஆம் ஆண்டு முதல் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளுக்கு வரி விதிக்கப்படவுள்ளது.
- பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை 1990 –ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2030 –ஆம் ஆண்டுக்குள் 70% அளவுக்குக் குறைக்கும் நோக்கில் இத்திட்டத்தை டென்மார்க் அறிவித்துள்ளது.
- அதன்படி, 2030 –ஆம் ஆண்டில் கால்நடைகள் வெளியேற்றும் 1 டன் அளவிலான மீத்தேன் வாயுவுக்கு சுமார் ரூ.3,600 வரி விதிக்கப்படவுள்ளது. இந்த வரியானது 2035 –ஆம் ஆண்டில் இரண்டரை மடங்கு அதிகரிக்கப்படும் என்றும் டென்மார்க் அரசு அறிவித்துள்ளது.
- அதே வேளையில், வருமான வரி செலுத்தும் விவசாயிகளுக்கு, மீத்தேன் வரியானது பாதிக்கும் குறைவாகவே விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தைப் பின்பற்ற மற்ற நாடுகளும் ஆர்வம் காட்டும் என டென்மார்க் அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது. ஆனால், அந்நம்பிக்கை பொய்த்துப்போகும் என்றே தோன்றுகிறது.
- இதே போன்ற திட்டத்தை 2025 –ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த நியூஸிலாந்து திட்டமிட்டிருந்தது. ஆனால், விவசாயிகளின் கடும் எதிர்ப்பு காரணமாகவும், அந்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாகவும் திட்டம் கைவிடப்பட்டது.

- கால்நடைகள் எண்ணிக்கையில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் நாடு இந்தியா, விவசாயத்துக்கு உறுதுணையாவதிலும், கிராம மக்களின் பொருளாதார வளர்ச்சியிலும் கால்நடைகளுக்க மிக முக்கியப் பங்குள்ளது.
- நமக்கு நன்மை தரும் கால்நடைகளுக்கு நன்றி செலுத்துவதற்கு என்றே மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. பெரும்பாலான இந்தியர்களின் அன்றாட வாழ்க்கை கால்நடைகளுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது. பண்டைய காலம் முதல் பசு புனிதமாகவே வழிபடப்படுகிறது.
- இந்தியாவில் சுமார் 50% மக்களுக்கு விவசாயமே வேலை வழங்கி வரும் நிலையில் இங்கு வேளாண்மை மூலமாக ஈட்டப்படும் வருவாய்க்கு வரி விதிக்கப்படுவதில்லை.
- வேளாண் விளைபொருள்களுக்கு மட்டுமல்லாமல், இடுபொருள்களுக்கும் கூட குறைந்த அளவிலான சரக்கு-சேவை வரியே விதிக்கப்பட்டு வருகிறது.
- அப்படியிருக்கையில், இந்தியாவில் கால்நடைகளுக்கு கார்பன் வரி விதிப்பது நடைமுறையில் சாத்தியமன்று, இது வளர்ந்து வரும் நாடுகள் அனைத்துக்கும் பொருந்தும்.
- மனிதர்கள் சுவாசிக்கும்போது கூட கரியமில வாயு வெளியேறுகிறது. அதற்குக் கூட மேற்கத்திய நாடுகள் கார்பன் வரி வசூலிக்கும் காலம் வந்தாலும் வரக் கூடும். முன்பு சுற்றுச்சூழலைப் பெருமளவில் மாசுபடுத்தி பொருளாதார வளர்ச்சி கண்ட மேற்கத்திய நாடுகள், தற்போது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மற்ற நாடுகளுக்கு உதவி, உரிய பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம்.

## 2022-23 இல் மாநிலக் கட்சிகளின் வருவாய்

- அதிக வருவாய் கொண்ட மாநில கட்சிகள் வரிசையில் ரூ. 737.67 கோடியுடன் பாரத ராஷ்டிர சமிதி (பிஆர்எஸ்) முதலிடத்தில் உள்ளது.
- மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் இரண்டாம் இடத்திலும் (ரூ.335.45 கோடி)
- தமிழகத்தில் ஆளும் திமுக மூன்றாமிடத்திலும் (ரூ.214.35 கோடி) உள்ளன.
- அந்த நிதியாண்டில் அதிகம் செலவிட்ட மாநிலகட்சிகளில் ரூ.181.18 கோடியுடன் திரிணமூல் காங்கிரஸ் முதலிடத்தில் உள்ளது.
- ரூ.52.62 கோடி செலவு செய்து திமுக நான்காம் இடத்தில் உள்ளது.
- நாட்டில் மொத்தமுள்ள 57 மாநில கட்சிகளில் 39 கட்சிகளின் நிதி நிலைமையை (2022-23) பகுப்பாய்வு செய்து, ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏடிஆர்) என்ற அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.
- தன்னார்வ நன்கொடைகளே கட்சிகளின் வருவாய்க்கு முக்கிய ஆதாரமாக காட்டப்பட்டுள்ளது.
- தங்களது வருவாயைவிட அதிகம் செலவிட்டுள்ளதாக 20 கட்சிகள் தெரிவித்துள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் 6 புதிய மசோதாக்கள்

**2024-ஆம் ஆண்டு நிதி மசோதா:**

- முன்மொழியப்பட்ட வரிகளை நடைமுறைப்படுத்த நிதி மசோதா அறிமுகம் செய்யப்பட்டு நிறைவேற்றக்கோரப்படும்.

**2024 பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா:**

- பேரிடர் மேலாண்மையில் பங்கேற்கும் பல்வேறு அமைப்புகளின் பங்களிப்புகள் தெளிவுப்படுத்தப்பட்டு, ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ள 2024-ஆம் ஆண்டு பேரிடர் மசோதாவில் திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

  2024-ஆம் ஆண்டு காபி (ஊக்குவிப்பு மற்றும் மேம்பாடு) மசோதா:

- இந்திய காபி தொழிலை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் கூறும் இந்த மசோதா காபி வாரியத்தை நவீனபடுத்தி அதன் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான விஷயங்களுக்கு கொண்டு வரப்படும்.

**ஆங்கிலேய கால இரு சட்டங்கள்:**

- கொதிகலன்கள் மசோதா - 2024, பாரதிய வாயுயான் விதேயக் -2024 மசோதா (இந்திய வானூர்தி மசோதா 2024) ஆகியவை ஆகும்.
- சுதந்திரத்துக்கு முந்தைய இந்த சட்டங்களையும் ரத்து செய்து தற்போதைய சூழ்நிலையில் பொருந்தும் வகையில் செயல்படுத்த இந்த மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டு சட்டமாக்கப்பட உள்ளன.
- 3 குற்றவியல் மசோதாக்களைப்போன்று சிவில் விமானப் போக்குவரத்து துறையின் மசோதாவுக்கும் ஹிந்தியில் பெயரிடப்பட்டு பாரதிய வாயுயான் விதேயக் -2024 மசோதாவாக அறிமுகப்படுத்தப்படுகிறது.
- 1934-ஆம் ஆண்டு விமானச் சட்டத்தின் தெளிவின்மையை நிவர்த்தி செய்து எளிமைப்படுத்தவும் இந்த மசோதா வழிவகை செய்கிறது.
- மேலும், ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேச நிதிநிலை அறிக்கைக்கான அனுமதியும் இந்தக் கூட்டத்தொடரில் கோரப்படுகிறது.